# சிவனருள்

**SIVANARUL** PP18663/01/2015 (034106)

திருவள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி-சித்திரை (ஏப்ரல் 2018) BULANAN AGAMA SAIVA இதழ்: 39

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்குமான சமயக் கல்வி ஏடு

விலை RM 2.00


# சைவ அறவாரியம் அமைந்தது!

## ஆலவாய் அண்ணல் சொக்கநாதன் திருவருளின்படி மலேசிய மண்ணில் சைவத் திருக்கோயில் கலை, கல்வி அறவாரியம் கடந்த 2017 டிசம்பர் திங்கள் 28ஆம் நாள் பதிவு கண்டது.

முதற்கட்டமாக சைவ ஆகம முறை பிறழாமல் அழகிய சிவன் கோயில் அமைக்கப்பெறும். அருகில் எழுநூறு பேர் அமரத் தக்க மண்டபம் மற்றும் பணியாளர் இல்லங்கள் அமைக்கப்படும். ஆங்காங்கே தியானக் குடில்கள் அமைக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக சைவக் கலைக்கல்லூரி அமைக்கப்படும். வகுப்பறைகள், தங்கு விடுதிகள், நூலகம், விளையாட்டுத் திடல் போன்றவை அமைக்கப்படும். திருமுறை, மெய்கண்ட சாத்திரங்கள், பண்ணிசை, உயர்நிலைத் தமிழ், இசைக்கருவி, நடனம் போன்ற கல்வியும் கலையும் பாடங்களாய் அமையும்.

இயற்கை உர வேளாண்மையில் அமையும் காய்கனித் தோட்டத்தில் மருத்துவ மூலிகைச் செடிகளும் இடம் பெறும்.

மூன்றாம் கட்டமாக ஆயிரத்து ஐநூறு பேர் அமரத்தக்க மாநாட்டு அரங்கம் ஒன்று அமைக்கப்படும்.



**YAYASAN FALSAFAH DAN INSTITUSI SAIVA** என்னும் அதிகாரத்துவ பெயரில் அமைச்சரால் கையெழுத்திடப்பெற்று அறவாரியம் அமையப்பெற்றது. மலேசிய சைவ சமயப் பேரவையின் ஆதரவு அமைப்பான இந்த அறவாரியம் சைவ சமயம் தொடர்பான பெருந்திட்டங்களைச் செயல்படுத்தவுள்ளது. திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு எழுவர் கொண்ட இயக்குநர் வாரியம் அமைக்கப்பெற்றுள்ளது. அனைவரும் உயர்நிலை கல்வியறிவும் தத்தம் துறைகளில் நிபுணத்துவமும் கொண்ட அறிஞர் பெருமக்கள். கல்வி மற்றும் மேம்பாட்டுத் துறைகளில் பட்டறிவு மிகுந்தோர்.

### மூன்று நிலைகள்

மூன்று கட்டங்களாக நிறைவேற இருக்கும் இத்திட்டம் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளில் நிறைவேறும். முதற்கட்டமாக சைவ ஆகம முறை பிறழாமல் அழகிய சிவன் கோயில் அமைக்கப்பெறும். அருகில் எழுநூறு பேர் அமரத் தக்க மண்டபம் மற்றும் பணியாளர் இல்லங்கள் அமைக்கப்படும். ஆங்காங்கே தியானக் குடில்கள் அமைக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக சைவக் கலைக்கல்லூரி அமைக்கப்படும். வகுப்பறைகள், தங்கு விடுதிகள், நூலகம், விளையாட்டுத் திடல்

(2ஆம் பக்கம் பார்க்க)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

## சைவ அறவாரியம் அமைந்தது!

போன்றவை அமைக்கப்படும். திருமுறை, மெய்கண்ட சாத்திரங்கள், பண்ணிசை, உயர்நிலைத் தமிழ், இசைக்கருவி, நடனம் போன்ற கல்வியும் கலையும் பாடங்களாய் அமையும். இருநிலைக் கல்வியாக அறிவியல், கணக்கியல், கணினியியல், சித்த மருத்துவம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்படும். இயற்கை உர வேளாண்மையில் அமையும் காய்கனித் தோட்டத்தில் மருத்துவ மூலிகைச் செடிகளும் இடம் பெறும்.

மூன்றாம் கட்டமாக ஆயிரத்து ஐநூறு பேர் அமரத்தக்க மாநாட்டு அரங்கம் ஒன்று அமைக்கப்படும்.

### ஏழரை ஏக்கர் நிலம்

மூன்று பெருந்திட்டங்களும் அமையத்தக்கதாக ஏழரை ஏக்கர் நிலம் பதினெட்டு இலட்சம் மலேசிய வெள்ளிக்கு வாங்கப்பட்டுள்ளது. சிலாங்கூர், கெர்லிங் நகருக்கு அருகில் பெருஞ்சாலையையொட்டி அமைந்துள்ள நிலத்தில் அடிப்படை வேலைகள் தொடங்கிவிட்டன. அளவை வேலைகள் முடிந்து வடிவமைப்பாளர் மற்றும் பொறியாளர் குழுவினர் தம் திட்டமிடல் பணிகளைத் தொடங்கியுள்ளனர். திட்டங்களுக்கான நிதி வரத்து குறித்து அறவாரியத்தின் இயக்குநர் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர்.

### எல்லாம் இறைவன் செயல்

எல்லாம் வல்ல பரம்பொருளாம் சிவபெருமானின் திருவருளும் நால்வர் பெருமக்களின் குருவருளும் முன்னிற்க, சிங்கப்பூர் மலேசியாவில் சித்தாந்தம் பயிலும் எமது மாணவரின் பத்தி நலம் கலந்த சிவ காணிக்கையால் திட்டத்திற்கான நிலம் கைக்கொள்ளப்பெற்றுள்ளது. தொடர்ந்து நமது திட்டங்கள் செயல்வடிவம் பெறுவதற்கும் மாணவரின் பொருள்வளமே திரண்டு வருகின்றது.



### பொதுமக்கள் அறப்பணி

முதல் தடவையாக இத்திட்டம் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. சமயக் கல்வியும் பண்பாடும் தழைக்க வேண்டும் என்று மனதார விரும்பும் இந்துக்களும் சைவ அன்பர்களும் தம் நிதியாதரவின் வழி இத்திட்டங்கள் நிறைவேற துணை நிற்க வேண்டும். குறிப்பிட்ட அளவு நிதி வழங்குவோர் அறவாரியத்தின் உறுப்பினர் தகுதியைப் பெறுவர்.

நிதி வழங்க விரும்புவோர் அறவாரியத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் சேர்க்கலாம். வங்கிப் பற்றுச்சீட்டை வாட்ஸ்அப் வழி படம் பிடித்து அனுப்பினால் அறவாரியக் கணக்கில் சரி பார்த்துப் பற்றுச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கிக்கணக்கு விபரம்:**

***Public Bank***
***Yayasan Falsafah dan Institusi Saiva***
***A/C 3208616019***



கோயில் கட்டுமானப் பணிகள் தொடங்கவுள்ளன. ஆன்மீகச்செல்வர்கள், சிவனடியார்கள் கூடிச் செய்யும் அறப்பணி இது. தத்தம் தனு, கரணங்களால் ஈட்டிய செல்வத்தில் உலகியல் இன்பம் துய்க்கக் கழிந்தது போக இறைவன் திருப்பணிக்குத் துளியேனும் ஒதுக்குவது சிவபெருமானுக்குச் செய்யும் நன்றிக் கடன் ஆகும்.

சிவபெருமானின் அருட் கொடையும் அடியாரின் பொருட் கொடையும் கொண்டே இத்திட்டம் நிறைவேற வேண்டும். பெருமானிடத்து அன்பு கொண்ட அடியார் மகிழ்ந்து உதவ வேண்டும். பிற விவரங்கள் அவ்வப்போது வெளி வரும்.

வேந்தன் அடி வெல்க! சிவசிவ



என்றும் சிவப்பணியில்
**முனைவர் நாகப்பன் ஆறுமுகம்,**
மற்றும் அறவாரிய இயக்குநர் குழுவினர்